PMO/01/01/01 2020.10.22

சகல மாவட்டச் செயலாளர்கள்/ அரசாங்க அதிபர்கள்,

## கிராமியப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான தேசிய நிகழ்ச்சித்திட்டம்

அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்திற்கு ஏற்ப மக்களை மையப்படுத்திய பொருளாதாரமொன்றை உருவாக்குவதற்காக அரசாங்கத்தினால் செயற்படுத்தப்படுகின்ற தேசிய பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்துடன் இணைந்த வகையில் கிராமியப் பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டிய தேவை முக்கிய பணியாக அரசாங்கத்தினால் இனங்காணப்பட்டுள்ளது. இப்பணியை அடைந்துகொள்வதற்காக **கிராமியப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான தேசிய நிகழ்ச்சித்திட்டம்** அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக 2020.10.15 ஆந் திகதி இடம்பெற்ற மாவட்டச் செயலாளர்களின் மாநாட்டில் பொருளாதாரப் புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர், கௌரவ பசில் ராஜபக்ஷ அவர்களினால் உங்களுக்கு அறியத் தரப்பட்டது.

மாவட்ட பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தின் கீழ் பிரதேச மட்டத்தில் செயற்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களை முறையாக ஒழுங்குபடுத்தி செயற்படுத்துவது தொடர்பான கண்காணிப்பு மற்றும் வழிநடாத்தல் மாவட்ட அபிவிருத்திக் குழு ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. அதேபோன்று, கெபினட் அமைச்சுக்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுக்கள் தேசிய மட்டத்தில் செயற்படுத்துகின்ற நிகழ்ச்சித்திட்டங்களை மாவட்ட மற்றும் பிரதேச மட்டம் வரை கொண்டுசெல்ல வேண்டியுள்ளதுடன், மக்களின் தேவைகளை இனங்கண்டு அவை மேல் மட்டம் வரை கொண்டுசெல்லப்படுவதை உறுதிப்படுத்துவது அவசியமாகும்.

எனவே, கெபினட் அமைச்சுக்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களினால் செயற்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களின் பிரதிபலன்களை பிரதேச மட்டத்தில் மக்கள் அடைந்துகொள்ள முறையான பொறிமுறையொன்று தேவைப்படுகிறது. அந்தப் பொறிமுறை உருவாக்கத்தை இலகுபடுத்துவதற்காக பிரதேசரீதியாக இராஜாங்க அமைச்சுக்கள் வழங்குகின்ற சேவைகளை அடிப்படையாகக்கொண்டு பின்வருமாறு அந்த அமைச்சுக்கள் நான்கு தொகுதிகளாக (Cluster) வகைப்படுத்தப்பட்டுள்ளன.

1. சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் குழு
2. வாழ்வாதார அபிவிருத்திக் குழு

3. உள்நாட்டு உற்பத்திக் கைத்தொழில்களை முன்னேற்றுவதற்கான அபிவிருத்திக் குழு
4. கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் குழு

இந்த நிகழ்ச்சித்திட்டத்தில், இந்த தொகுதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கெபினட் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் செயலாளர்கள் கால அட்டவணையொன்றுக்கு ஏற்ப ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சமூகமளிக்கவுள்ளனர். அந்த குழுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அமைச்சர்களின் பட்டியல் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் பின்வரும் நோக்கங்களை அடைந்துகொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.

I. இதன்போது அமைச்சுக்களினால் வழங்கப்படுகின்ற சேவைகள் தொடர்பாக விழிப்புணர்வளித்தல்
II. மாவட்டத்தில் பொதுமக்கள் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் மேற்குறிப்பிட்ட துறைகளுக்கு ஏற்புடையவாறு முகங்கொடுக்கின்ற சிக்கல்களுக்குத் தீர்வுகளை வழங்குதல்
III. அந்த அமைச்சுக்கள் பரஸ்பரம் ஒன்றுடனொன்று தொடர்புற்று பிரதேசரீதியான தனித்துவங்கள் மற்றும் சாத்தியவளங்களை இனங்காணுதல் மற்றும் துறைரீதியான திட்டங்களைத் தயாரித்தல்
IV. மாவட்ட மட்டத்தில் பொதுமக்கள் பிரதிநிதிகள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களுக்கிடையிலும், அரச அதிகாரிகளுக்கிடையிலும் பரஸ்பர தொடர்பினைக் கட்டியெழுப்புவதன் மூலம் தேசிய மட்டத்திலான இலக்குகளை ஒவ்வொரு மாவட்டங்களிலும் பொதுமக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படும் வகையில் அடையச் செய்தல்.

இந்த மாவட்டக் கூட்டங்களை ஏற்பாடு செய்யும்போது பிரதானமாக அந்த இராஜாங்க அமைச்சுக்களுக்கு ஏற்புடையவாறு பொதுமக்கள் மற்றும் பொதுமக்கள் பிரதிநிதிகள் இனங்கண்ட சிக்கல்களை அவற்றின் முன்னுரிமைக்கு ஏற்ப பட்டியலிட்டு, அவற்றில் அதிக முன்னுரிமை வழங்க வேண்டிய சிக்கல்கள் தொடர்பாக கவனஞ் செலுத்தி, அதற்கு ஏற்புடைய பொறுப்புக் கூற வேண்டிய அதிகாரிகளுக்கு இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றுமாறு அழைப்பு விடுக்க முடியும். இதன்போது, இந்த சிக்கல்கள் தொடர்பாக கூட்டத்திற்கு முன்பே ஏற்புடைய அதிகாரிகளை அறிவுறுத்துவது மிகவும் பயன்மிக்கதாகும். மேலும், ஒரு அமைச்சினால் மாத்திரம் ஏதேனும் சிக்கலைத் தீர்ப்பது கடினமாக அமையும் சந்தர்ப்பங்களில், அதற்கு ஏற்புடைய ஏனைய அமைச்சுக்களைத் தொடர்புபடுத்திக்கொள்ள முடியும். அத்துடன் அந்த துறையைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தனியார் தொழில் முயற்சியாளர்கள்/ முதலீட்டாளர்களுக்கும் இந்தக் கூட்டத்திற்கு அழைப்பு விடுப்பது மிகவும் பயன்மிக்கதாக அமையலாம்.

இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஏற்புடையவாறு ஒவ்வொரு அமைச்சுக்களினதும் நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்திட்டங்கள் மற்றும் அவற்றின் முன்னேற்றத்தை அளவிட முடியுமான வகையில் வலையமைப்புச் செய்யப்பட்ட தகவல் அமைப்பொன்று (Web base system) எதிர்காலத்தில் தயாரிக்கப்படும். அதன் மூலம் மாவட்டச் செயலாளர்களும், இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்களும், கெபினட் அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் அமைச்சுக்களின் மாவட்ட மட்டத்திலான கருத்திட்டங்களின் முன்னேற்றத்தை அதில் உள்ளடக்க முடியும் என்பதுடன், அந்த தகவல்களை முதல் சந்தர்ப்பத்திலேயே ஒரு தடவை மாத்திரம் உள்ளடக்கி அதனை இற்றைப்படுத்துவதன் மூலம் தேவையற்ற கடிதப் பரிமாற்றங்களை நிறுத்திக்கொள்ள முடியும்.

ஆரம்பமாக இந்த நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்தி, மாதாந்தம் முன்னேற்றத்தை மீளாய்வு செய்து, மூன்று மாதங்களின் பின்பு முழுமையான மதிப்பீடொன்றுக்கு உட்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது. இதன்போது சகல அதிகாரிகளும் தமக்குரிய பொறுப்பினை முறையாக நிறைவேற்றுவார்கள் என எதிர்பார்க்கிறேன். இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் சகல அமைச்சுக்கள் மற்றும் மாவட்டங்களுக்குமிடையிலான ஒருங்கிணைப்புப் பணிகள் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் அபிவிருத்திப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதம அமைச்சரின் மேலதிக செயலாளரினால் (அபிவிருத்தி) மேற்கொள்ளப்படுகிறது. (011-7124410, 077-7005446)

வலையமைப்புச் செய்யப்பட்ட தகவல் அமைப்பொன்று உருவாக்கப்படும் வரை பயன்படுத்த முடியுமான படிவமொன்றைத் தயாரித்து இராஜாங்க அமைச்சுக்களுக்கும், மாவட்டச் செயலாளர்களுக்கும் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மாவட்ட மட்டத்தில் இந்தக் கூட்டங்களை ஏற்பாடு செய்தல் மற்றும் முன்னேற்றத்தை மீளாய்வு செய்யும் பொறுப்பு மாவட்டச் செயலாளர்களுக்கு ஒப்படைக்கப்படுகிறது. மேலும் நிலவும் கொரோனா தொற்று நிலைமை காரணமாக ஏற்புடைய சுகாதாரப் பாதுகாப்பு முறைமைகளைப் பின்பற்றி சுகாதாரத் துறை சார்ந்த அதிகாரிகளை உசாவி தேவையான நடவடிக்கைகளை ஏற்பாடு செய்வது மிகவும் பொருத்தமானதாகும். கூட்டமொன்றில் பங்குபற்றும் அதிகாரிகளின் எண்ணிக்கையைக் குறைந்த மட்டத்தில் பேணிச் செல்ல வேண்டும். உதாரணமாக, மாவட்டத்தின் கல்வி சம்பந்தமான சிக்கல்களைக் கலந்துரையாடுவதற்கு மாகாண மட்டத்தில் மாகாண கல்விச் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் மற்றும் சிக்கலுக்கு ஏற்புடைய வலயக் கல்விப் பணிப்பாளர் மாத்திரமே கலந்துகொள்ள வேண்டும்.

தேவைப்படின், இந்த நான்கு குழுக்களினதும் கூட்டங்களை ஒரே தினத்திலும் நடாத்த முடியும். தமது மாவட்டத்தின் கூட்டங்களுக்கான கால அட்டவணையை ஒட்டுமொத்த நிகழ்ச்சித்திட்டத்திற்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் மாற்றியமைத்துக்கொள்ள முடியும். மேலும், உங்களது மாகாணத்தின் கௌரவ ஆளுநர்கள், பொதுமக்கள் பிரதிநிதிகள்

மற்றும் மாகாண சபையின் ஏற்புடைய அதிகாரிகளை இந்தக் கூட்டத்தில் பங்கேற்கச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறேன்.

**காமினீ எஸ். செனரத்**
பிரதம அமைச்சரின் செயலாளர்

**பிரதிகள்:**

| | | |
|---|---|---|
| 1. | ஜனாதிபதியின் செயலாளர் | - தயவுடன் தகவலுக்காக |
| 2. | சகல கெபினட் அமைச்சுக்களின் செயலாளர்கள் | தயவுடன் தகவலுக்காக மற்றும் தேவையான நடவடிக்கைகளுக்காக |
| 3. | சகல பிரதம செயலாளர்கள் | |
| 4. | சகல இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள் | |
| 5. | சகல ஆளுநர்களின் செயலாளர்கள் | - கௌரவ ஆளுநர்களுக்கு அறிவிப்பதற்காக |
| 6. | நிதி ஆணைக்குழுவின் செயலாளர் | - தயவுடன் தகவலுக்காக |